

# பிள்ளைப்பருவ அபிவிருத்தியை அறிந்துக்கொள்வோம்


# பிள்ளைப்பருவத்தின் பிரதான கட்டங்கள்

| | |
|---|---|
| முன்பிரசவ பருவம் | தாயின் கருப்பையில் இருக்கும் காலம் |
| சிசுப்பருவம் | பிறந்தது முதல் 28 நாட்கள் வரை |
| குழந்தைப்பருவம் | முதல் மாதத்திலிருந்து 12மாதங்கள் வரை |
| முன்பிள்ளைப்பருவம் | 1 தொடக்கம் 5 வயது வரை |
| பின்பிள்ளைப்பருவம் | 6 தொடக்கம் 10 வயது வரை |


# பிரசவத்திற்கு முந்திய பருவம்


***கருவுற்ற தாய் ஒருவர் பின்பற்ற வேண்டியவை.***

- ஒரு தாய் தான் கருவுற்றதும் முதலில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தருக்கு அறியத்தருதல் வேண்டும்.
- சுகாதா நிலையங்களில் நடாத்தப்படுகின்ற மாதாந்த சிகிச்சைகளுக்கு பங்குப்பற்றுதல் வேண்டும்
- கர்ப்பிணித்தாய்மார்கள் போசணைச்சத்துக்கள் அடங்கிய உணவுகளை உட்கொள்ளுதல் வேண்டும். இது குழந்தையின் வளர்ச்சியில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும் பிரசவ காலத்தின் போது குழந்தையின் நிறை 2.5Kg-3.5Kg வரை இருத்தல் வேண்டும்.
- தாயின் மனநிலை மகிழ்ச்சியானதாக காணப்படுதல் வேண்டும். ஊள நெருக்கீடுகளற்றதாக காணப்படுதல் வேண்டும்


Fetal Growth From 8 to 40 Weeks
Embryo at 8 Weeks
Fetus at 12 Weeks
16
20
24
28
32
36
40

# பிள்ளைகளின் தேவைகள்



# சிசுப்பருவம்



- குழந்தை தாயின் கருவறையிலிருந்து வெளிவந்து 28 நாட்கள் வரையான காலம் சிசுப்பருவமாகும்.
- குழந்தை வெளிசூழலுக்கு முதன் முதலாக அறிமுகமாகும் காலம் இதுவாகும்.
- தாய் குழந்தையை புதிய சூழலுக்கு இசைவாக்கமடையச் செய்வார்.
- குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான போசணைக்கூறுகள் தாய்ப்பால் மூலமாக கிடைக்கின்றது.
- தாயின் செயற்பாடுகள் மூலம் குழந்தையின் உள, சமூக விருத்தி ஊக்கப்படுத்தப்படுகின்றது.

| தேவைகள் | செய்யவேண்டியவை |
|---|---|
| போசணை | குழந்தைக்கு தேவைப்படும் போதெல்லாம் தாய்ப்பால் ஊட்டுதல்<br>இது குழந்தையின் வளர்ச்சிக்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கும் அவசியமானது. |
| வளர்ச்சி | போதியளவு உணவு, போதியளவு தூக்கம் அவசியம் |
| பாதுகாப்பு | குளிர்,சூடு, விழுதல், காயங்கள் ஏற்படல், நோய்கிருமிகள் என்பவற்றிலிருந்து பாதுகாத்தல் முக்கியமானது. |
| உள,சமூக தேவைகள். | அன்பையும் ஆதரவையும் பெற்றுக்கொடுத்தல்<br>உள வளர்ச்சிக்கு தேவையான ஆலொசனையை பெற்றுக் கொடுத்தல்<br>இனிமையான ஒலிகளை கேட்கச் செய்தல்<br>பிரகாசமான ஒளியுள்ள அறையொன்றில் குழந்தையை வைத்திருத்தல்.<br>குழந்தை எமது அவதானத்தை பெற எத்தனிக்கும் போதெல்லாம் அதனை ஏற்றுக்கொள்ளலும் அதற்கு பதிலளித்தலும். |

## குழந்தைக்கு தாய்ப்பால் வழங்குவதன் முக்கியத்துவம்

- குழந்தைக்கு தேவையான அனைத்து போசணைப் பதார்த்தங்களும் தாய்ப்பாலில் காணப்படுகின்றது.
- குழந்தைப்பிறந்து சில நாட்களுக்கு தாய்ப்பாலுடன் சுரக்கப்படும் கொலஸ்திரம் எனப்படுகின்ற மஞ்சல் நிற கெட்டியான பதார்த்தமானது குழந்தையின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் சமிப்பாட்டுத் தொகுதியின் செயற்பாட்டை ஆரம்பிக்கவும் உதவுகின்றது.
- குழந்தை தாய்ப்பாலை சுத்தமான நிலையில் தேவையானளவு வெப்பத்துடன் பெற்றுக்கொள்கின்றது.
- தாய்ப்பாலூட்டுவதன் மூலம் தாய்க்கும் குழந்தைக்கும் இடையேயான உறவு வலுப்பெறுவதோடு குழந்தையின் நோயெதிர்ப்புச் சக்தியையும் அதிகரிக்கின்றது.
- உடல் பருமன் அதிகரித்தல், ஒவ்வாமை ஏற்படுதல் என்பவற்றை தடுக்கின்றது.

# குழந்தைப்பருவம்

- குழந்தைப்பருவம் என்பது பிறந்து ஒருமாதத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதியாகும்.
- இப்பருவத்தில் துரித உடல் உள வளர்ச்சி ஏற்படுவதோடு சமூகச் சூழலுக்கும் பழக்கப்படுத்தப்படுவர்.



# குழந்தைப் பருவத்தின் உடல், உள சமூகத் தேவைகள்

| தேவைகள் | செய்யக்கூடியவை |
|---|---|
| போசணை | • முதல் ஆறு மாதங்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் தாய்ப்பாலூட்டல்.<br>• 6 மாதங்கள் பூர்த்தியடைய போது மேலதிக உணவுகள் வழங்குவதை ஆரம்பித்தல் குழந்தையின் வளர்ச்சி குறைகின்ற போது, அல்லது தாய் வேலைக்கு செல்பவராயின் மட்டும் 4ம் மாதம் முதல் மேலதிக உணவுகள் கொடுப்பதை ஆரம்பித்தல்.<br>• முதல் வருடத்தில் சீனி உப்பு சேர்ப்பதை தவிர்த்தல்<br>• ஒரு வருடம் பூர்த்தியாகும் பொழுது வீட்டில் தாயாரிக்கப்படும் உணவுகளை கொடுத்தல் |
| வளர்ச்சி | • குழந்தையின் வளர்ச்சி முறையாக இருக்கின்றதா என அறிய மாதம் ஒரு முறை நிறையும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உயரமும் கணித்து வளர்ச்சி அட்டவணையில் குறித்தல் வேண்டும்.<br>• வளர்ச்சி குறைப்பாடு அல்லது அசாதாரண அளவில் அதிகரிப்பு இருக்கும் பட்சத்தில் வைத்தியரை நாடுதல் |
| பாதுகாப்பு | • உரிய காலத்தில் தேவையான தடுப்பூசிகளை வழங்குதல்<br>• குழந்தைகளை சன நெரிசல் கொண்ட இடங்களுக்கு அடிக்கடி கொண்டு செல்வதை தடுத்தல். |
| உளத்தேவைகள் | • அன்பையும் ஆதரவையும் வழங்குதல் உள வளர்ச்சிக்குத் தேவையான ஊக்குவிப்பை வழங்குதல். |

# முன்பிள்ளைப்பருவம்

- பிள்ளையின் ஒரு வயது முதல் 5 வயது வரையான காலமே முன்பிள்ளைப்பருவமாகும்.

| தேவைகள் | செய்யக்கூடியவை |
|---|---|
| போசணை | • குழந்தைக்கு ஐந்து வேளைக் கொண்ட உணவுக்குப் பழக்கப்படுத்துதல்<br>• வளர்ச்சி அதிகரிக்க நிறையுணவுகளை அடிக்கடி வழங்குதல் |
| வளர்ச்சி | • வளர்ச்சி முறையாக இருக்கின்றதா என அறிய மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நிறையும் ,உயரமும் கணித்து வளர்ச்சி அட்டவணையில் குறித்தல் வேண்டும். |
| பாதுகாப்பு | • உரிய காலத்தில் தேவையான தடுப்பூசிகளை வழங்குதல்<br>• தொற்று நோய்களிலிருந்து பிள்ளைகளை பாதுகாத்தல்.பிள்ளை பல்வேறு செயற்பாடுகளில் எப்போதும் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய திடீர்விபத்துக்களிலிருந்து பாதுகாத்தல். |
| உளத்தேவைகள் | • அன்பையும் ஆதரவையும் வழங்குதல<br>• · உள வளர்ச்சிக்குத் தேவையான ஊக்குவிப்பை வழங்குதல்.<br>• பிள்ளை தனது ஆற்றல்களை வெளிக்கொண்டுவர உதவுதல் |

# பின்பிள்ளைப்பருவம்

| தேவைகள் | செய்யக்கூடியவை |
|---|---|
| போசணை | • பிள்ளைக்கு நிறையுணவைப் பெற்றுக்கொடுத்தல் |
| வளர்ச்சி | • நான்கு மாதங்களுக்கு ஒரு முறையாவது நிறை, உயரம் என்பவற்றுக்கமைய உடல்திணிவுச்சுட்டியை கணித்தலும் அதற்குறிய நடவடிக்கையை மேற்கொள்ளலும் |
| பாதுகாப்பு | • திடீர் விபத்துக்கள் காயங்கள் ஏற்படுவதில் இருந்து பாதுகாத்துக்கொள்ளல்.<br>• தமக்கு தீங்கு விளைவிக்கும் சந்தர்ப்பங்கள் மனிதர்கள் சம்பந்தமாக அறிவூட்டல்<br>• தம்மை சூழ இருப்பவர்களுடன் ஒத்துழைப்போடு செயற்படவும் அதன் பின்விளைவுகள் தொடர்பாகவும் அறிவூட்டல். |
| உளத்தேவைகள் | • அன்பையும் ஆதரவையும் வழங்குதல் உள வளர்ச்சிக்குத் தேவையான ஊக்குவிப்பை வழங்குதல். |

# பின்னூட்டல்

1. பிள்ளைப்பருவத்தின் பிரதான கட்டங்கள் எவை?
2. குழந்தைப்பருவத்தின் உளவளர்ச்சிக்குத் அவசியமான ஊக்குவிப்புக்கள் 2 தருக?
3. முன்பிள்ளை, பின்பிள்ளைப் பருவத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் எவை?
4. பிள்ளைப்பருவத்தினரின் ஆளுமைவிருத்திக்காக பாடசாலையில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் 5 தருக?

# நன்றி